# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)

***(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் 2015, திசெம்பர் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

***[ 45 ஆம் சட்டமூலம் ]***

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : 10.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையில் 291இ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த அல்லது மதங்களைச் சேர்ந்த தொகுதியினரிடையே மத, இன அல்லது சமுதாய ஒவ்வாமையை விளைவிக்கின்ற வன்செயல்களை அல்லது பகைமையை ஏற்படுத்துகின்ற அல்லது தூண்டுகின்ற ஆட்களுக்கு குற்றத்தீர்ப்பளிப்பதற்கும் தண்டிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கானதாகும்.*

## தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)

*ச.வ.ஓ.- 28/2015*

### (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*19 ஆம் அத்தியாயத்தில் 291இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 291ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டக்கோவையின் 291இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"வன்செயல்கள், பகைமை முதலியவற்றை ஏற்படுத்துதல் அல்லது தூண்டுதல்.*

291இ. மொழியப்பட்ட, எழுதப்பட்ட அல்லது எழுதப்படுவதற்கு உட்கருதப்பட்ட சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சைகைகள் மூலம் அல்லது புலப்படத்தக்க குறிப்பீட்டின் மூலம், அல்லது வேறுவகையாக சமுதாயங்களுக்கிடையே அல்லது வெவ்வேறு வகுப்பினரான ஆட்களுக்கிடையே அல்லது வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த அல்லது மதங்களைச் சேர்ந்த தொகுதியினரிடையே வன்செயல்களை அல்லது மத, இன அல்லது சமுதாய ஒவ்வாமையை அல்லது பகைமை எண்ண உணர்ச்சிகளை அல்லது பகைமையை ஏற்படுத்துவதற்கு உட்கருதுகின்ற அல்லது தூண்டுகின்ற அல்லது தூண்டுவதற்கு எத்தனிக்கின்ற எவரும், இரண்டாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 009558 -475 (2015/12)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்